# NGM COLLEGE

(AUTONOMOUS)

Re-Accredited with 'A' Grade by NAAC

An ISO 9001 : 2008 Certified Institution

POLLACHI - 642 001

NGM 60 1957-2017 DIAMOND JUBILEE

# மனையியல் மகத்துவம்

## (சான்றிதழ் பாடத்திட்டம்)

## (Certificate Course)



## மனையியல் மேம்பாடு

### முதல் தாள்

***Empower the Youth to Enrich the Nation***

# மனையியல் மகத்துவம்

## சான்றிதழ் பாடத்திட்டம்

## (Certificate Course)

முனைவர் க. தனலட்சுமி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.

## மனையியல் மேம்பாடு

## முதல் தாள்

பதிப்பு
என்.ஜி.எம்.கல்லூரி
பொள்ளாச்சி

பாட நூல் : மனையியல் மகத்துவம்
பதிப்பு : முதற்பதிப்பு - 2018
வெளியீடு : என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

## ஆலோசனைக் குழு

**டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்**
தலைவர், என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

**முனைவர் என்.வாசுகி ராஜா**
புலமுதன்மையர்,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோவை.

**முனைவர் மணிமொழி**
இணைப் பேராசிரியர்,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோவை.

**முனைவர் அ.லோகநாயகி**
உதவிப் பேராசிரியர்,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோவை.

**திருமதி சுமதி முத்துசாமி**
ஆசிரியர் மற்றும் தலைவர்
கிராமப்புற தத்தெடுப்புத் திட்டம், அறிவுத் திருக்கோவில், பொள்ளாச்சி.

## நூல் ஆக்கக் குழு

**தலைவர்**

முனைவர் பொ.மா.பழனிசாமி, முதல்வர்

**தொகுப்பாசிரியர்**

முனைவர் ப. பிருந்தா, தலைவர் வணிகவியல்துறை

**துணை தொகுப்பாசிரியர்கள்**

பேராசிரியர் என். ராதா,
தலைவர், ஆங்கிலத்துறை (சுயநிதி)

முனைவர் ஜி.அகிலாண்டேஸ்வரி,
தலைவர், வணிக நிதியியல்துறை (சுயநிதி)

முனைவர் எம்.வி.சத்தியபாமா,
தலைவர், மின்னணு வணிகவியல்துறை (சுயநிதி)

பேராசிரியர் எஸ்.ஜெயலட்சுமி,
தலைவர், மனிதவள மாண்புத்துறை (சுயநிதி)

முனைவர் ப.வடிவேல்,
இணைப்பேராசிரியர் (பநி), தமிழ்த்துறை

முனைவர் க.தனலட்சுமி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

முனைவர் ஆ.மகாலட்சுமி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

அச்சிட்டோர் : ருக்மணி ஆப்செட் பிரஸ், சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோவை - 641 021.
போன் : 0422-2672789, 2672435. ஈமெயில் : office.rukmaniop@gmail.com

## பொருளடக்கம்


அணிந்துரை

வாழ்த்துரை

ஆசிரியர்உரை

நோக்கங்கள்

பாடத்திட்டம்

1 **திருமணத்தின் கலாச்சாரமும் பாரம்பரியமும்**
முனைவர் ஆ.மகாலட்சுமி 1

2 **இல்லறமே நல்லறம்**
முனைவர் ப.வடிவேல் 10

3 **தாய்மையின் மேன்மை**
பேராசிரியர் எஸ்.ஜெயலட்சுமி 18

4 **தாய் ஒரு முன்மாதிரி**
முனைவர் க.தனலட்சுமி 26

5 **விருந்தோம்பல் என்னும் பேரறம்**
முனைவர் ப.பிருந்தா 32

6 **ஆரோக்கியமான உணவும் வளமான வாழ்வும்**
முனைவர் எம்.வி.சத்தியபாமா 38

7 **முதியோர் கலாச்சாரத்தின் அடையாளம்**
முனைவர் சு.செல்வக்குமார் 47

8 **கூட்டுக்குடும்ப முறையை மீட்டெடுப்போம்**
முனைவர் ப.பிருந்தா, திருமதி ரமாதேவி, முனைவர் பி.நாகராஜன் 53

9 **தேசிய அளவிலான சாதனைப் பெண்கள்**
முனைவர் பே.மகேஸ்வரி 64

10 **உலகளாவிய சாதனைப் பெண்கள்**
முனைவர் அ.லோகமாதேவி 75

மாதிரி வினாத்தாள்

# பகுதி - 1 திருமணமும் உறவு மேம்பாடும்

## 1.1. திருமணத்தின் கலாச்சாரமும் பாரம்பரியமும்

**முனைவர் ஆ. மகாலட்சுமி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை.

ஒரு சமுதாயம் பழைமையானதாக இருந்தாலும் அல்லது புதிதாக இருந்தாலும், இரண்டு இன்றியமையாப் பண்புகளைக் கொண்டு விளங்குகின்றது. ஒன்று அதன் பொருளாதார வளம், மற்றையது அதன் குடும்பமுறை. இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை. நாட்டின் பொருளாதாரம் செழிக்க, குடும்பக் கட்டமைப்பு அவசியமாகிறது. ஒரு குடும்பத்தை உருவாக்குவதில் சமூக ஏற்புப் பெற்ற திருமணம் இன்றியமையா நிலையை வகிக்கிறது. திருமணம் என்ற இந்த ஒப்பந்தம் நிலைபெறுவதற்கு முன்னர் பழைய காலங்களில், பல குழுக்களைச் சார்ந்த மக்களிடையே தாயின் உறவுதான் அவர்களை அடையாளம் காண உதவியது. இந்நிலை மாறி, இனம், குழு என்ற அமைப்புகளை நிலைநிறுத்தத் தாய், தந்தை என்ற உறவு முறைகள், ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலையில் வற்புறுத்தப்பட்டன. ஓர் இனத்தின் தொடர்ச்சி விடுபடாதிருக்கவும், இனக்கலப்பு ஏற்படாதிருக்கவும் வேண்டித் திருமணக் கட்டுப்பாடுகள் உருவாயின. இந்தத் திருமணக்கட்டுப்பாடுகள், மக்களின் பழக்க வழக்கங்கள், மரபுகள், சமுதாயக்கட்டுப்பாடுகள் போன்றவற்றின் அடிப்படையில் எழுகின்றன. இந்த வகையில் தமிழரின் திருமணமுறைகள், பாரம்பரியம் முதலானவைகளை விளக்குவதாகும்.

### 1. கலாச்சாரம் பாரம்பரியம் - விளக்கம்

மனித குலத்தின் மிகப்பழமையான பண்பாடுகளில் இந்தியப் பண்பாடும் ஒன்றாகும். ஒரு நிலையில் இந்தியா பல பண்பாடுகளின் அல்லது கலாச்சாரத்தின் கலவை என்றாலும் சீன, ஐரோப்பிய, ஆப்பிரிக்க, பூர்வீக அமெரிக்க பண்பாடுகள் போன்ற ஒரு தனித்துவமான பொதுப் பண்பாடு உண்டு. இப்பண்பாடு பல்வேறு சூழல்களில் இருந்து பெறப்பட்ட தாக்கங்களை உள்வாங்கி வெளிப்பட்டு நிற்கின்றது.

"உன்னிடம் மற்றவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறாயோ, அதுபோலவே நீ அடுத்தவரிடமும் நடந்து கொள்ள வேண்டும்" என்பதைத்தான் கலாச்சாரம் பண்பாடு என்று பெரியார் கூறியுள்ளார்.

தமிழ்க் கலாச்சாரம், தமிழ் மன்னர்களின் பண்பாடு ஆகும். தமிழ்க் கலாச்சாரம் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்க்கை வழிகளில் வேரூன்றி உள்ளது. தமிழ்க் கலாச்சாரம் மொழி, இலக்கியம்,

இசை, நடனம், நாட்டுப்புற கலை, தாற்காப்பு கலை என வெளிப்படுகின்றது. தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் வழியாகவும் தமிழர் தாயகப் பிணைப்பின் வழியாகவும் சமூக, பொருளாதார, அரசியல் தளங்கள் வழியாகவும் பாதுகாக்கப்படும் தனித்துவ பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும்.

## 2. திருமண முறையில் ஆரம்ப காலநிலை

மனதாலும் உடலாலும் ஒன்றுபட்டு திருமணம் இல்லாமல் தலைமக்கள் மனையறத்தை மேற்கொண்டபோது கயமை முதலான தீயகுணங்களினால் ஆண்கள் உளம் மாறி பெண்களை கைவிட்டபோது, அப்பெண்ணின்பால் தோன்றிய குழந்தைகளுக்கு உரிமை வழங்காமல் தாங்கள் திருமணம் செய்து கொண்டமைக்குச் சாட்சி ஏதும் இல்லாமல், பெண்களை ஏமாற்றி கைவிட்டனர். இதனால் பெரியோர்கள் கூடி ஒருவரையறை செய்தார்கள். (தொல் - பொருள் - கற்பியல் - 4). இதனால் தமிழ்ச்சான்றோர்கள் ஆரியர்களின் வருகையால் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டுச் சிதைவு நேரா வண்ணமும் காத்தனர் என்றே கூறலாம். திருமணமாவது தலைமக்கள் இருவரும் ஒன்று கூடி ஒழுகும் ஒழுக்கம். திருமணமுறையில் பெண்ணைக் கொடுத்தற்கு உரிமை உடைய பெற்றோர், இசைவுடன் கொடுக்க, கொள்ளுவதற்கு உரிமை உடைய ஆண்மகன் மணமகளை, சில சடங்குகளை மேற்கொண்டு ஏற்பது கற்பாகும். (தொல்பொருள்-கற்பியல்-1). முன்னோர் வாழ்ந்தநெறியில் மணமக்கள் வாழ்ந்திடுவதைப் பல தலைமுறையாகக் கற்பித்து, பலரும் அறியுமாறு சில சடங்குகளைச் செய்து வாழையடி வாழையாக வரும் வாழ்க்கை முறையே திருமணமாகும்.

### திருமணப்பொருத்தம்

தமிழர்கள் தலைமக்களின் திருமண(குணம்) ஒப்புமையைப் பத்துவகையாகப் பாகுபடுத்தியுள்ளனர். இதை தொல்காப்பியத்தில், ஒத்த தலைமக்களிடம் இருக்கவேண்டிய ஒப்புமைப் பண்புகளாகக் குறிப்பிட்டுள்ளனர். இதில்,

1. பிறப்பு - குலப்பிறப்பு, 2. குடிமை - பண்பாடு, 3. ஆண்மை - ஆளுமைத்திறன், 4. ஆண்டு - அகவை (வயது) 5. உரு - அழகு, 6. நிறுத்த காமவாயில் - அன்பு நிலைபேறுடைய ஒழுக்கத்திற்குரிய உள்ளக்கிளர்ச்சி, 7. நிறை - அடக்கம் 8. அருள் - இருவரில் ஒருவர் மற்றவரின் குறையினை நிறையாக ஏற்றொழுகும் மனமாட்சி 9. உணர்வு - இருவரில் ஒருவர், மற்றவரின் உள்ளக் குறிப்பை அறிந்தொழுகும் நுண்ணறிவு, 10. திரு - தெய்வத்தன்மை. இவ்வாறாக பத்து வகை ஒப்புமைகளை வகுத்தளித்து திருமணத்தைச் செய்வித்தனர்.

## 3. திருமணத்தின் இன்றியமையாமை

வாழ்நாள் முழுவதும் இன்ப துன்பம் இரண்டையும் பகிர்ந்து கொண்டு பிறவியின் அறக்கடமையை நிறைவேற்றத் தொடங்கும் முதல் நிகழ்ச்சியே திருமணம். மணம் என்ற சொல் நிறைந்த பொருளுடையது. மண்ணுதல் என்றால் நெருங்குதல், கலத்தல், அழகு பெறுதல் எனப்படுகின்றது. மணம் என்ற சொல்லுக்கு மண் என்பது வேர்ச்சொல். மண்ணின்

நலன்களை உணர்வதும் மணம். எனவே இல்லறத்தை மணவாழ்க்கை என்பர். மேலும் மண் உலகத்தின் பஞ்ச பூதங்களில் ஒன்றாக இருப்பதிலும் ஒரு சிறப்புண்டு. நீர், நெருப்பு, காற்று, விண் ஆகிய நான்கிற்கும் மண்ணே தாங்கும் தளமாக இருக்கிறது. மண்ணின் துணை கொண்டே மணப்பொருட்கள் தோன்றுவதால் வாசனை என்ற பொருளிலும் திருமணம் தொடர்பு பெறுகிறது. மணவாழ்வில் ஈடுபடும் மணமக்கள் உள்ளமும் உடலும் முகமும் மலர்ந்து மணம் வீசப்பெறுவது திருமணவாழ்க்கையாகும்.

திருமணம் ஆயிரங்காலத்துப் பயிர் ஒத்த பயனும் ஒத்த அறிவும் ஒத்த வளர்ச்சியுமுள்ள ஆடவரும் பெண்டிரும் உடல், உணர்வு, உயிர் மூன்றாலும் இரண்டறக் கலந்து வாழும் அன்பு வாழ்க்கைக்கு உரிமை படைக்கும் நிகழ்ச்சி. ஒவ்வொருவர் வாழ்விலும் நான்கு அருட்படிகள் உள்ளன. அவற்றுக்கு முறையே அறம், பொருள், இன்பம், வீடு என்று முன்னோர்கள் துறை வகுத்தனர். இந்நான்கிற்கும் நல்வழி காட்டும் மணம் திருமணமாகும்.

## 4. திருமணச் சடங்குகளும் பண்பாடும்

பெண்ணையும் ஆணையும் இணைத்து ஒன்றாக இல்லறத்தில் ஈடுபடவைக்கும் திருமண நிகழ்வு சமுதாயத்தில் பலரறியச் செய்யப்பட வேண்டியது எனக் கருதப்பட்டது. எத்தகைய முறைத் திருமணமாக இருந்தாலும் நாடறியச் செய்யும் திருமணச் சடங்கிற்கு இன்றியமையாமை அளிக்கப்பட்டது. வரலாற்றை நோக்கின், சங்ககாலச் சமுதாயம் சமயஞ்சார்ந்த சமுதாயமாக இருந்ததாகத் தெரியவில்லை. பெரிதும் போர்க்காலச் சமுதாயமாகவே இருந்தது. அத்துடன் அன்றாட நிகழ்வுகளுக்கும், உலகியல் இன்பங்களுக்கும், உலகியற்தேவைகளுக்கும் மதிப்புக் கொடுத்து அவற்றை ஒட்டியே அவர்கள் வாழ்க்கை முறைகளும் அமைந்திருந்தமையால் அவர்கள் திருமணச்சடங்கு முறைகளும் உலகியலை ஒட்டியனவாகவே அமைந்திருந்தன.

சங்கப்பாடல்களில் திருமணச் சடங்குமுறைகள் பற்றித் தனிப்பட்ட பாடல்கள் காணப்படவில்லையெனினும், அகநானூற்றில் 86,136 - ஆம் பாடல்கள் தமிழக மக்களிடையே நிலவிய மணச் சடங்குகள் பற்றி அறிய ஓரளவு துணைசெய்கின்றன. அதில், ஊரறிய ஒரு பெண் ஆணை மணக்கிறாள் என்பதனை, நன்முரசம் கொட்டி அறிவிப்பது திருமணத்தில் இன்றியமையாததாக இருந்தது. மண முழவு, மணமுரசு இரண்டும் ஒலிக்கப்பெறும். திருமணத்தில் பங்கேற்பவர்கள் அமர்வதற்காகப் பந்தல்கள் அமைக்கப்பெற்று அங்கு புதுமணல் பரப்பப்படும். அங்கு வந்த மக்களுக்கு ஊன் கலந்த சோறும் சில வேளைகளில் உழுந்து கலந்து செய்யப்படும் களிமிதவையும் (இட்லி) மகிழ்ச்சியுடன் அளிக்கப்படும்.

விருந்தாக வந்த பெரியோர்களையும் கடவுளையும் வணங்கி உகந்த நேரமான, திங்களை உரோகிணி கூடும் நேரத்தில், பறவை நிமித்தங்கள் நன்நிமித்தங்களாக அமையும் காலத்தில் திருமணத்தை நடத்துவர். அப்போது மங்கலமாக விளக்கேற்றி வைப்பர். புதிய ஆடை அணிந்த பெண்ணைப் பந்தலில் அமர்த்தி அறுகம் புல்லின் கருமையான கிழங்கிலுள்ள முகையை (மொட்டு)வெண்மையான நூலில் கட்டிப்

பெண்ணிற்கு அணிவிப்பர். இவ்வாறு அணிவிப்பது பெண்ணின் திருமணம் நிலைபேறானதாக இருக்கவேண்டும் என்பது கருதியாகலாம். இன்றும் திருமணமான தம்பதிகளை,

> **"ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி**
> **மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருக்க"**

எனத் திருமணத்தில் வாழ்த்துவது இங்கு குறிப்பிடத்தக்கது.

முதிய மகளிர் மண்டை எனும் ஒரு வகைப் பாத்திரத்திலும், குடத்திலும் நீரினை நிரப்பி வந்து மணப்பெண்ணினை நீராட்ட தண்ணீர் தருவர். இல்லத்தில் வாழ்ந்து புதல்வரைப் பெற்ற நான்கு மகளிர் அந்நீருடன் நெல், மலர் இட்டு அப்பெண்ணை நீராட்டுவர். அவ்வாறு நீராட்டும்போது மணம்புரியும் பெண்ணைக் "கற்பினின்றும் வழுவாது, நல்ல பல பேறுகளையும் தந்து, உன்னை அடைந்த கணவன் விரும்பிப் பேணும் விருப்பை அவனுக்குத் தருபவளாக அமைவாயாக" என அவர்கள் வாழ்த்துவர். இங்கு புதல்வரைப் பெற்ற பெண்கள் நீராட்டுவது மணப்பெண்ணும் புதல்வரைப் பெற்று நற்பேறுகளை உடையவளாக வாழ வேண்டும் என்பதற்காகவும் அவள் கற்பிற் தவறாது வாழ வேண்டும் என்பதற்காகவும் கூறப்படுகின்றன. நீராடலின் பின் தூய உடை அணிந்த பெண் அதே பந்தலில் இழையணி உடையவளாக விளங்க அவளைப் பெண்ணின் பெற்றோர் ஆடவனிடம் கைப்பிடித்துக் கொடுக்கின்றனர். இவ்வாறான திருமணச் சடங்கினைச் சங்கத் தமிழர் கண்டனர்.

## தமிழில் வடவர் முறை கலத்தல்

தமிழ் முறைப்படி பெண்ணை ஆணிடம் திருமணத்தில் அளிக்கும் மரபுச் சடங்குகள், வடநாட்டைச் சார்ந்த பல்வேறு மத மக்களும் தமிழகத்தில் வந்து வாழத் தொடங்கிய காலம் முதல், சில புதுச் சடங்குகளையும் தனக்குள் சேர்த்துக் கொண்டன. இந்த மாற்றங்களைச் சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி திருமணத்திலேயே காண முடிகிறது.

> **"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்**
> **தீவலஞ் செய்வது காண்பார்கண் ணோன்பென்னை"** (சிலப்பதிகாரம் 1:52-53)

என்ற சிலப்பதிகார அடிகள், தீ சாட்சியாகப் பெண்ணினுடைய பெற்றோர், மறையோர் வழிகாட்டிட அவளை ஆடவனிடம் அளிக்கும் சடங்கு பற்றிக் கூறுகின்றன. இது தமிழகத்திற்குப் புதிய திருமணச் சடங்காகும். தீ சாட்சியாகப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பதும், மறையோர் வழிகாட்டுவதும் வடநாட்டுத் திருமணங்களில் பிராசாபத்திய திருமண முறையில் நிகழும் சிறப்புச் சடங்குகளாகும்.

## தமிழர் பண்பாடு

மனிதம் என்பது உலகிற்குரியது. மனிதத்திற்குரிய பண்புகள் அனைத்தும் உலகப்பொதுமை. மாந்தர் அடிப்படையில் ஆடவர் பெண்டிர் என இருநிலையில் அமைகின்றனர். பண்பாடு என்பதை "பாடு அறிந்து ஒழுகுதல்" என்று கூறுவர். பண்பாடு என்னும் சொல்லானது திருந்துதல், செம்மைப்படுதல், தகுதியாதல் என்று பொருள்படும்.

கலையழகினாலும் அறிவுத் திறனாலும் முழுத்தன்மையைச் செழுமையாக அடையும் விழுமிய மனநிலையையே பண்பாடு என்று குறிப்பிடுகிறோம். சமுதாயத்தில் சூழலுக்குத்தக தங்களை அமைத்துக்கொள்ளுதல் என்பது பொருள்படும்.

"பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை" (கலித்தொகை -133)

என்பதால், முன்பு குறிப்பிட்டபடி தமிழர் பார்வை உலகப் பார்வையாக அமைந்துள்ளது. அமிழ்தமே கிடைப்பினும் தானொருவன் தனித்து உண்ணாத பண்பாட்டால் உலகம் இன்றும் வாழ்வதாகப் புறநானூறு, தமியர் உண்டலும் இலரே." (புறம் -182) என்கின்றது.

தமிழ்மொழி விழுமிய நூல்களையும் வியத்தகு பண்புகளையும் கொண்ட உலக முதல் உயர்தனி பண்பாடாக உள்ளது.

5. **இன்றைய திருமணங்கள் எதிர்கொள்ளும் சவால்கள்**

- திருமணம் தொடர்பான எதிர்பார்ப்புகள், கனவுகள் முதலானவைகளை ஊடகங்களின் நிலைப்பாட்டுடன் ஒப்பிட்டுப்பார்த்து கனவுகளை வளர்த்தல்
- ஒரு பெண் தன்னுடைய சுதந்திரம், விருப்பம் இவையனைத்தும் தன்னைவிட்டுச் சென்று விடும் என நினைத்தல்.
- மேற்படிப்பு, நிரந்தர வேலை, குடும்பச் சூழல் போன்ற காரணங்களினால் தன் திருமணத்தைத் தள்ளிப்போடுதல்
- திருமணத்திற்குத் தேவையான பொருளாதாரப் பற்றாக்குறை, வறுமை, வரதட்சணைப் பிரச்சனை முதலான காரணங்களினால் திருமணம் செய்வதை மறுத்தல்
- தனக்கு இணையான பொருளாதாரத்தில் இருக்கும் ஆண் கிடைக்கப்பெறாமை முதலான காரணங்களால் பெண்கள் திருமணத்தை மறுக்கிறார்கள்.

**வயதான திருமணத்தால் வரும் தீமைகள்**

- வயதுடன் திருமணம் என்பது நம் தமிழர்கள் அகவைப் பொருத்தம் என்றனர். மணமக்கள் உடல் நல்வளர்ச்சியடைந்தால் நன்மகப்பேறுண்டாவதுடன் தாய்க்கும் பாதிப்பில்லை. அதே சமயத்தில் இளமை கழியுமுன் மணந்தால்தான் இல்லறச்சிறப்பும் பிற வசதிகளும் உண்டாகும்.
- நம் நாடு வெப்ப நாடாதலால், குளிர் நாடுகளிற்போல் இளைஞர் நீண்டநாள் மணவாதிருத்தல் இயலாது. ஆணுக்கு இருபத்தி ஐந்து வயதும் பெண்ணுக்கு இருபத்தொரு வயதும் திருமணப்பருவமாகக் கொண்டனர்.
- தக்க பருவத்தில் மணஞ்செய்து வையாமையால் இளைஞர், இளைஞியரும் பல தீய பழக்கங்கட்கு ஆளாய் விடுகின்றனர். இதனால் இளைய சமுதாயம் பல கொடியநோய்களுக்கு ஆளாகி விடுகின்றனர்.

- மேலும் வயது முதிர்ந்து மணஞ்செய்வதால் பிள்ளைகளும் தலையெடுக்காமல் பெற்றோரின் முதுமையிற் சின்னஞ்சிறியதுமாயிருந்து, குடும்பம் மிகமிக இடர்ப்படுகின்றது..

- இவைபோன்ற காரணங்கள் வயதான திருமணத்தால் ஏற்படும் தீமைகளாகும்.

**6. சவால்களுக்கான தீர்வுகள்**

- நமது வீட்டிற்கு வரும் மருமகளோ, தாம் ஏற்ற மருமகனோ, தமது வயிற்றில் பிறவாத தம் மக்கள் என்றும் தன் துணையின் பெற்றோர் தம் பெற்றோரைப் போன்றே மதிக்கப்பட வேண்டியவர் என்றும் எண்ண வேண்டும்.

- கணவனின் வருமானத்தை எதிர்நோக்கி நடக்கும் குடும்பங்களில் மனைவி தனக்கிருக்கும் பொறுப்புகளை எண்ணிப் பார்த்து, அதற்கேற்ற வகையில் சிக்கனமாகக் குடும்பம் நடத்தவேண்டும்.

- சமுதாய வாழ்வில் சுதந்திரம், சமத்துவம், ஆகியவை குடும்ப வாழ்வில் இடம் பெறுவது காலப்போக்கில் ஏற்படும். அன்பு அடிப்படையில் இணைந்தவர்கள் அறமும், பண்பும் போற்றி வாழ்ந்தால் மனநிறைவான குடும்பத்தைக் காணலாம்.

- ஒருவருக்கொருவர் உறுதுணையாக, உதவியாக, பயனுள்ளவராக வாழும் பண்பே, குடும்பம் இடர்பாடின்றி ஏற்றம் பெற்றுத்திகழ வழிவகுக்கும். வெறுப்பு, கசப்பு, பொறாமை, தன்னலம், சூழ்ச்சி, வஞ்சகம், கடுஞ்சினம் ஆகியவை குடும்ப வாழ்வைச் சீரழிக்கும்.

- இல்லறத் தம்பதியரிடையே உருவாகும் புரிதல், நாளும் வளரும் அன்பினால் சிறந்த, வாழ்க்கை தெவிட்டாத இன்பமாக அமைந்தால், இல்வாழ்வில் ஏற்படும் சுமைகளைத் தாங்கும் ஆற்றலை அது தரும். கணவனும் மனைவியும் ஒத்து வாழ்ந்து வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தாமல் இருக்க வழி வகை செய்யவேண்டும்.

**7. தீர்வுகளுக்கான வழிமுறைகளும் உறவு மேம்பாடும்**

- பிறர் தவறுகளை அளவோடும் கடுமையின்றியும் எடுத்துச் சொல்லும் பக்குவம் வேண்டும்

- கருத்து வேறுபாடு இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாது சிறிது காலம் கடத்தியோ, ஓிருநாள் கழித்தோ, தெளிவான உரையாடல் மூலம் தம்பதியருக்குள் உடன்பாடு எளிதாகும்.

- வாழ்க்கைத் துணைவர் இருவரும் வெவ்வேறு குடும்பத்தில் வேறுபட்ட சூழ்நிலையில் வளர்ந்தவர்கள். ஆதலால் சமைக்கும் முறையிலும் உணவின் சுவையிலும் பரிமாறும் வகையிலும் உடை உடுத்தலிலும் சொற்களைப் பயன்படுத்துவதிலும் வேறுபாடு உறுதியாகக் காணப்படும். ஆனால் புரிதல் மேம்படும்போது, குறைகளாகத் தெரிந்தவை எல்லாம், உடன்பாடு ஏற்பட்டு நிறைகளாக மாறும்.

- வெறுப்புடன் கூடிய கடும் சொற்கள், உரையாடல்கள், துணைவரின் மனத்தைப் புண்ணாக்கும். கனி இருப்பக் காய் கவரும் பேச்சால் யாருக்கும் நன்மை இல்லை.

தவறுகளையும் குற்றங்களையும் எடுத்துச் சொல்லும் பக்குவம் இருந்தால் குடும்பம் சீர்பெறும்.

- இல்லறமல்லது நல்லறமன்று எனவும், அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை எனவும் அறிவுறுத்தினர் நம் முன்னோர்கள். அதன் வழி நடந்து இல்லறத்தைப் பெருமைப்படுத்துவோம்.

- இல்லறத்திலே ஈடுபடுத்தப்பெற்ற இருவரும் ஒருமனப்பட்டவராதல் வேண்டும். ஒரே கருத்தில் தோய்தல் வேண்டும். ஒரே நோக்கு நிலையில் நின்று உலகத்தைக் காணல் வேண்டும். ஒரே இலட்சியமுடையராதல் வேண்டும். இவர்கள் தான் தம்பதிகளென்று அழைக்கப்படுதற்குரியராகின்றார்.

- இவர்களிடையே நிலவும் உறவு முறையானது அழிகின்ற உடலை அடிப்படையாகக் கொண்டிராது. அழியாத ஆத்மாவை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இவர்கள், ஐம்பொறிகளினால் கிடைக்கக்கூடிய இன்பத்தைப் பெரிதாகக் கருதமாட்டார்கள். ஆன்ம சொருபத்தைக் காணும் முயற்சியில் ஏற்படக் கூடிய இன்பத்தையே பெரிதாகக் கருதுவார்கள். இவர்கள், மேலான உணர்ச்சிகளின் நிலைக்களமாயிருப்பார்கள். அந்த உணர்ச்சிகளை, மற்றவர்களுடைய நன்மைக்காகச் செயல் துறையில் கொண்டு வந்து காட்டுவார்கள். இவர்கள், மௌனத்திலே பேசுவார்கள். பிரிவிலே நெருங்கியிருப்பார்கள். நரை, திரை, மூப்பு ஆகிய எதுவும் இவர்களுடைய ஒருமையைக் குலைக்காது. வறிய குடிலும் செல்வ மாளிகையும் இவர்களுடைய மதிப்பில் சம இடம் பெற்றே நிற்கும். இவர்கள் நடத்தும் இல்லறத்தையே நல்லறமென்று சொல்ல வேண்டும்.

## 8. திருமணப் பாரம்பரியத்தைக் கட்டிக்காப்பதில் பெண்களின் பொறுப்பு

திருமணம் பெண்ணிற்குப் புதிய மதிப்புகளையும் புதிய நிலைகளையும் அளிக்கின்றது. அதே நேரத்தில் அவளிடமிருந்து சமுதாயம் புதிய கடமைகளையும் எதிர்பார்க்கின்றது. திருமணமான பெண் "இல்லாள்" என்ற பெயரால் அழைக்கப்பட்டாள். இல்லத்திற்குரியவள் என்ற பண்பைக் குறிக்கும் இச்சொல்லிற்கு நேரடியான ஆண்பாற் சொல்லே தமிழில் இல்லாத நிலையிலிருந்து இல்லத்திற்குப் பொறுப்பானவள் பெண்ணே என்பது புலனாகின்றது. பெண் இல்லத்திற்குப் பொறுப்பாக அமைய, ஆண் தொழில் செய்து, பொருளீட்டும் பொறுப்பை மேற்கொண்டான். இதையே,

**"வினையே ஆடவர்க்கு உயிரே..." (குறுந்தொகை -135:1)**

என்ற அடி விளக்கி நிற்கின்றது.

இல்லத்திலுள்ள வேலைகளைச் செய்தல், குழந்தைகளைப் பராமரித்தல், உணவு தயாரித்தல், விருந்தினரை ஓம்புதல், இல்லத்தில் நோயுற்றோரைக் கவனித்தல், அண்டிவந்தோரை ஆதரித்தல் போன்ற அனைத்தையும் பெண்ணே செய்ய வேண்டுமென்ற எதிர்பார்ப்பு சமூகத்தில் இருந்தது. இவை குறித்துச் சங்கப் பாடல்களும், அவற்றையடுத்து

வந்த பதினெண்கீழ்கணக்கு நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களும் மிக விரிவாக எடுத்துரைக்கின்றன.

இல்லில் வாழும் வாழ்க்கை இல்வாழ்க்கையாகும். இல்லில் நிகழும் அறம் இல்லறமாகும். இல்லில் அறம் புரிந்து வாழும் வாழ்க்கை இல்லற வாழ்க்கையாகும். இதனையே வான்மறை வகுத்த வள்ளுவர் பெருமான் இல்வாழ்க்கை என்னுந் தலைப்பில் பெருமைப்படுத்திக் கூறிச் சென்றுள்ளார்.

இல்லறத்தைச் சிறப்பித்துரைக்க வந்த சான்றோர்கள் "இல்லற மல்லது நல்லறமன்று" என்றும், "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்றும் "இல்லற இன்பமே நல்லற இன்பம்" என்றும் இனிது போற்றியுரைத்துள்ளனர்.

- மணமக்கள் சமுதாயப் பொறுப்புகளோடு கூடிய வாழ்க்கைநிலை வாழ கற்பு ஒழுக்கம் தேவைப்பட்டது. கற்புடன் கூடிய இல்லறக் கடமை இருபாலருக்கும் பொதுவானதாக இருப்பினும், இல்லறத்தின் மாண்புக்குப் பெரிதும் துணை நிற்போர் பெண்கள் என்பதால் தலைவியரின் ஒழுக்கம் பெரிதும் போற்றப்படுகிறது.
- இயற்கையின் படைப்பிலே வலிமைக்கு ஆடவரும் மென்மைக்குப் பெண்டிரும் என படைக்கப்பட்டுள்ளது. எனவே, ஆடவரின் பாதுகாப்பு, மகளிர்க்கு ஓர் அறத்தை நிலைபெறச் செய்கிறது. இதனால் கற்புநிலை வலியுறுத்தப்பட்டது.
- ஆணின் வாழ்வில் காதலுடன் வீரம், கடமை, தொழில், புகழ், நாட்டம், ஆகியவையும் கூடி வரும். அதே சமயம் பெண்ணின் வாழ்வில் தாய்மைப்பேற்றின் விளைவாக அன்புடைய குடும்பம், குழந்தைகள் நலம், கணவன் நலம் ஆகியவையே முதன்மை பெறும்.
- பெண் குடும்பத் தலைவியாகவும் ஆண் வெளியுலகத் தலைவனாகவும் இயங்கும் நிலையால் பெண்ணின் வாழ்க்கை முழுவதும் அன்பின் அடியாக உருக் கொள்கிறது.
- புற உலகத்தொடர்பும் புகழ் நாட்டமும் ஆண்களுக்கு மிகுதியாகவும் குடும்பப் பொறுப்பே மகளிர்க்கு மிகுதியாகவும், வாழ்வில் அன்பிற்கு இடம் தருபவன் ஆண். அன்பே வாழ்வாகக் கொள்பவள் பெண் என்பதை வலியுறுத்தும். இதனை ஆங்கிலக் கவிஞர் பைரன்,

**"ஆணின் அன்பு அவன் வாழ்வில் ஓர் அங்கம்**
**பெண்ணின் அன்பு அவள் வாழ்வு அனைத்தும்"**

என்று கூறுவது பொருத்தமாகும்.

அக்காலத்தில் கூட்டுக்குடும்பமுறை பெரிதும் பேணப்பட்டது. இதனால் குடும்பக் கட்டுமானம், பொருளாதார வளர்ச்சி, குடும்ப அறம் முதலியவைகள் சிறந்தமுறையில் இருந்துள்ளன. இவ்வாறாக மனிதன் தன் வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்புவரை பல்வேறு சடங்குமுறைகளைப் பின்பற்றி வருகிறான். மனிதன் பின்பற்றும் பழக்கவழக்கங்கள் காலப்போக்கில் சீரிய சிந்தனை, அறிவியல் கருவி ஆகியவை காரணமாகச் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும்பொழுது அவை சடங்காக மாறுகின்றன. சடங்கென்பது

நிர்ணயிக்கப்பட்ட விரிவான நடத்தைகளின் வடிவமாகும். இது தனி மனிதனின் சுயமான ஆக்கமாவோ பண்பாட்டினுடைய தனிச்சிறப்புக் கூறாகவோ அமையும். நம்பிக்கைகளையும் இலட்சியங்களையும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான, திருமணச் சடங்கு தமிழர்களிடையே இன்றும் நின்று நிலவி வருகிறது. இக்கட்டுரை வழியாகத் தமிழர்களின் திருமணமுறை உறவுகளுடன் கூடிய பண்பாடு, பாரம்பரியம் நிரம்பியதாக இருந்தது என்றும் அதனால்தான் நம் குடும்பம், சமுதாய மற்றும் நாட்டின் மேன்மை உலக அரங்கில் பெருமை பெற்றுள்ளது என்பதையும் அறிகிறோம்.

### துணைநின்ற நூல்கள்


1. இரா.மோகன் (தொகுப்பாசிரியர்) - தமிழ்க்கட்டுரைக் களஞ்சியம் சாகித்திய அகாதமி, முதற்பதிப்பு - 2009.
2. மா.இராசமாணிக்கனார் - இலக்கிய அமுதம், ஔவை வெளியீடு, சென்னை - 01, முதற்பதிப்பு - 1958.
3. செந்துறைமுத்து - தமிழர் வாழ்வியல், சேலம், முதற்பதிப்பு -1960.
4. க.ப.அறவாணன் - தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள், தமிழ்க்கோட்டம், அடைந்தகரை, சென்னை - 29, மூன்றாம்பதிப்பு - 1994.
5. ர.விஜயலட்சுமி - தமிழக மகளிர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை - 13.
6. ச.வே.சுப்பிரமணியன் - தமிழின் தொன்மையும் தமிழர் பெருமையும், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 01.
7. சு.தாமரைப் பாண்டியன் - வள்ளிதிருமணம் குறிஞ்சிப்பாட்டு - ஒப்பாய்வு
8. பாவலரேறு ச.பாலசுந்தரம் - தொல்காப்பியம், (தொகுதி-3,பகுதி-2) பொருளதிகாரம், பெரியார் பல்கலைக்கழக வெளியீடு, சேலம் - 11, முதற்பதிப்பு - 2012.



மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம்செய்திட வேண்டும் அம்மா !
பங்கயக் கை நலம் பார்த்தல்லவோ பாரில் அறங்கள் வளரும், அம்மா ! – கவிமணி